# நல்லூர் பிரதேசசபை

## மேற்பார்வையாளர் தரம் 111 பதவி வெற்றிடத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் – 2026

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அவர்களின் G/NPC/A4/LG/App/LGM/26/01ஆம் இலக்க 2026.04.16ம் திகதிய மற்றும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களது NP/05/01/UNS/Gen ஆம் இலக்க 2026.04.24ம் திகதிய கடிதங்கள் சார்பாக, உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம் அவர்களின் NP/14/1/ET/Uns/Gen/2025 ஆம் இலக்க 2026.05.04ம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்ததற்கமைவாகவும் 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ அளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவைக்குரிய சேவைப்பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் தீரத்தங்களுக்கமைவாகவும் நல்லூர் பிரதேசசபையில் காணப்படும் கீழ்க்குறிப்பிடப்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் நிரந்தர பதவிகளில் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர் | 111 | 01 |

### பொதுவான தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாவிடில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்டு பிரதேசசெயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. வயது : வயதெல்லை ஏற்புடையதல்ல.

### சேவை நிபந்தனைகள்

1. நல்லூர் பிரதேசசபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாக கடமையாற்றுவதுடன் பதவியில் கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்பட்டிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 5 வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

### கல்வி, தொழில்சார் தகைமைகள்

1. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேசசபையில் தேர்ச்சியற்ற சேவையில் கடமையாற்றுபவராகவும் PL1 சம்பளத்தொகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

2. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத்தொகுதி MN 1-2025க்கு ஏற்ப மேற்பார்வையாளர் தரம் - 111 பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா 45,230 – 10 X 540 – 11 X 630 – 10 X 890 – 10 X 1,190 – 78,360/= ஆகும்.

**தெரிவு செய்யப்படும் முறை :**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு மேற்பார்வையாளர் நியமனம் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 2026.06.10**

**விண்ணப்பிக்கும் முறை :**

நல்லூர் பிரதேசசபையின் தாபனப்பகுதியில் 2026.05.26ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத்திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

யுகராஜா ஜெலீபன்<br>
செயலாளர்,<br>
நல்லூர் பிரதேசசபை.<br>
2026.05.26

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

# நல்லூர் பிரதேசசபை

## வேலை / வெளிக்கள மேற்பார்வையாளர் பதவியின் தரம் 111ற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் - 2026

01. பெயர் விபரம் :

1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................
(ஆங்கில பெரிய எழுத்தில்)

1.2 முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) : ................................................

1.3 முழுப்பெயர் (தமிழில்) : ..........................................................................

02. வதிவிட விபரம் :

2.1 தனிப்பட்ட வதிவிட முகவரி (ஆங்கிலத்தில்) : ..........................................

2.2 தனிப்பட்ட வதிவிட முகவரி (தமிழில்) : ....................................................

2.3 கிராம சேவகர் பிரிவு : ..............................

2.4 பிரதேச செயலர் பிரிவு : ............................

03. 3.1 பால் :

ஆண் - M
பெண் - F
☐ (உரிய பொருத்தமான ஆங்கில எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 தொலைபேசி இலக்கம் :

1. நிரந்தரம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. கையடக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 சேவை விபரம் :

4.1 நீங்கள் தற்போது வகிக்கும் பதவிப்பெயரும் தரமும் : ..................................

4.2 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ...........................

4.3 தற்போதைய பதவி நிரந்தரமானதா? ..................

4.4 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? ................

4.5 பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ......................

4.6 பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட கடித இலக்கமும் திகதியும் : ..................................

.......................................

4.7 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) : ரூபா .....................

4.8 தற்போதைய பதவி ஓய்வூதிய உரித்துடையதா? ......................

4.9 2026.06.10 ஆந் திகதியன்று உள்ளவாறான தற்போதைய பதவியில் மொத்த சேவைக்காலம்

ஆண்டுகள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5.0 கல்வித் தகைமைகள் : க.பொ.த (சா/த)

அமர்வு 1

ஆண்டு : ...................

சுட்டெண் : .................

அமர்வு 11

ஆண்டு : ........................

சுட்டெண் : .......................

| இல | பாடம் | பெறுபேறு | இல | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |
| 4. | | | 4. | | |
| 5. | | | 5. | | |
| 6. | | | 6. | | |
| 7. | | | 7. | | |
| 8. | | | 8. | | |
| 9. | | | 9. | | |
| 10. | | | 10. | | |

**6.0 பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் சமர்ப்பித்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னராயின தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி ……………………..

……………………………….
பரீட்சார்த்தியின் கையொப்பம்

**(திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பம் இடப்படல் வேண்டும்)**

---

**7.0 கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தில் ………………………………………. பதவியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலரான திரு/திருமதி/செல்வி ……………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் …………………. ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………

உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்

பதவி முத்திரையும்

பெயர் : ……………………………………………………

பதவிப்பெயர் : ……………………………………………………

முகவரி : ……………………………………………………

திகதி : ……………………………………………………

8.0 திணைக்களத் தலைவரின் அத்தாட்சி :

1. திரு/திருமதி/செல்வி ………………………………………………………….. இத்திணைக்களத்தில் ………………………………………………… பதவியில் பணியாற்றுபவரெனவும்,
2. அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமான பதவியொன்றினை வகிக்கின்றாரெனவும்,
3. 2026.06.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும்,
4. நிரந்தரப் பதவியொன்றில் இவரை உறுதிப்படுத்தும் கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும்,
5. அவர் 2026.06.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது ………. ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவையினை பூர்த்தி செய்துள்ளாரெனவும்,
6. அவர் PL-1-2025 சம்பளக்குறியீட்டில் வேதனத்தைப் பெற்றுள்ளாரெனவும்,
7. 2026.06.10 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும்,
8. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும்,
9. அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது சுயவிபரக்கோவைப் பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது எனவும், இதனடிப்படையில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

………………………………………

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் : ……………………………………………………..

பதவிப்பெயர் : ……………………………………………………..

முகவரி : ……………………………………………………..

திகதி : ……………………………………………………..